கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (மார்ச்/ஏப்ரல் 2019)

## FA/S 2113 Art of Display and Visual Communication

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி–II இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் என மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி – I

01. (அ) மட்டக்களப்புச் சூழலில் இடம்பெறும் கலைத்தொழில்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) நீர் குறிப்பிட்ட கலைத் தொழில்களில், ஒன்றின் அழகியல் பெறுமானங்களை விமர்சன நோக்கில் ஆராய்க.

(15 புள்ளிகள்)

02. (அ) கலை, வணிகத்துக்கு எதிரான தன்மைகளைத் தன்னகத்தே கொண்ட சமகால காண்பியக் கலை வடிவங்கள் ஐந்தை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) அவற்றின் காட்சிப்படுத்தல் வழிமுறைகள் மாறியுள்ள தன்மைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

03. (அ) கூத்துக்கலை நிகழ்த்தும் சந்தர்ப்பத்தில் காண்பியக் கலையுடன் தொடர்பான திறன்கள் பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) நீர் குறிப்பிட்ட கலை அம்சங்கள் சமூகத்தை ஒன்றிணைக்கும் தளத்தைக் கொண்டிருப்பது தொடர்பாக உமது அவதானத்தை கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

### பகுதி – II

04. கலைகளின் பெறுமதியினை அதிகரிப்பதில் அவற்றின் காட்சிப்படுத்தல் முறைமை எவ்வாறான பங்கினை வகிக்கும் என்பதை ஆராய்க.

(30 புள்ளிகள்)

05. இலங்கையில் பெண்ணியல் நோக்கில் தமது கலைப்படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களின் காட்சி ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டிய பொறுப்பு உமக்குக் கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் எவ்வாறான படிமுறைகளினூடாக அதனை முன்னெடுப்பீர்.

(30 புள்ளிகள்)

06. சமகாலக் காண்பியக் கலைப் போக்கு கலைக்கூட (Art Gallery) முறைமைக்கு அச்சுறுத்தலாக அமையுமா? ஆராய்க.

(30 புள்ளிகள்)

*****